**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S.J.VINOTH JENI ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO.216, CHINNAKAMANPATTI VILLAGE, SATTUR TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 06.08.2021 AT 11.00 A.M IN M/S.S.M THIRUMANA MAHAL,NO.4/214B,MADURAI BY PASS ROAD, NEAR SIVAKASI PIRIVU, SATTUR-626 203, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | R. Mangalarama subramanian | : | District Revenue Officer/<br>Additional District Magistrate<br>Virudhunagar. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | R. Pushpa | : | Revenue Divisional Officer,<br>Sattur |
| 4 | V. Venkatesh | : | Tahsildar, Sattur |
| 5 | K. Perumalsamy | : | Special Sub Inspector of Police,<br>Vachakarapatti Police Station. |
| 6 | K. Ganesan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 7 | Public | : | **51 Nos (List enclosed)** |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Revenue Officer/Additional District Magistrate, Virudhuragar, other officials, all general public and project proponents who have attended the public hearing for the proposed project of M/s.J.Vinoth Jeni Rough Stone and Gravel Quarry, Chinnakamanpatti Village, which is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinamani" and "Indian Express" dated 30.06.2021. Also, he informed that vide publicity was given informing the details of Public Hearing by circulating phamlets in the villages nearer to the project site and through Tom Tom. Further, he stated that the arrangements for public hearing was made following the Standard Operating Procedures as stipulated in the guidelines specified in the Government of India, Ministry of Environment, Forest and Climate Change, Impact Assessment Division, Office Memorandum F.No.22-25/2020-1A.III Dated:09.06.2021. Subsequently, the DEE stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation.

He also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the State Level Environment Impact Assessment Authority.

Then, the District Revenue Officer/Additional District Magistrate, Virudhunagar initiated the Public Hearing process. Further, the District Revenue Officer/Additional District Magistrate requested the project proponent to explain about their proposed project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

After that, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.J.Vinoth Jeni Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

The views of the Public attended Public Hearing and the final replies by the project proponent are detailed below.

**Thiru. Pandiyarajan, Keelaottampatti:**

He stated that we will get employment from this quarry and our livelihood will be developed

**Thiru.Ayyanar, Sivakasi:**

This site is away from the road. This proposed quarry provides stone and soil and it will be useful for the construction activities.

**Tmt. Sathya, President, Chinnakamanpatti Village Panchayat:-**

She requested to provide water facilities to school and hostel. Also, she demanded to help for road facilities and to provide employment to the local public. She welcomes the project.

**Thiru. Muniyappan, Nam Tamilar Katchi, Sattur:**

He stated that the local public decided to request the respective Panchayat to pass resolution against the establishment of this stone quarry. Everyone of the local public is to be consulted in this regard.

**Thiru. Muruganandham, Sippiparai:**

He requested to consider this project considering the statement made by the public including Panchayat President who have spoken earlier.

**Thiru. Sekar, Sivakasi:**

The cost of diesel will come down due to this quarry. Local public get facilities. Income of the local public will be increased and the livelihood will be developed. He requested to recommend the project.

**Thiru. Muniyappan, Nam Tamilar Katchi, Sattur:**

He wants clarification whether any damage will happen to the buildings. Stone quarries are coming in this area with an assumption that there cannot be any agricultural activities in this area due to water problems. But, it is not true. Agricultural activities can be carried out using well water and Vaipar water. Also he demanded views of the local public.

**Thiru.Thangaraj,Environmental consultant of the project:**

This project has been proposed with approval from all the related departments. There is no building within 300 meters distance. There will not be any damage to the buildings. 33percent of the land in this area are dry and are with juliflora trees. The subsoil is hard rock. The water available only during rainy season. Now, there is a modern technology is available for blasting activities. So, there is no possibility of affecting of nearby buildings. The proponent will grow more trees.

**Thiru M.Palpandi, Vice President, Chinnakamanpatti Panchayat:**

There will not be any problem due to quarrying activities. We do not have any objection in setting up of this quarry. Local public will get employment.

**Thiru Vinoth Jeni, Project Proponent:**

There will not be any disturbance due to this quarry. He thanked the public.

After this, since no one came forward to give opinion/view on the project, the District Revenue Officer/ Additional District Magistrate has invited the public to offer their further more views if any. Even after that, there was no further response from the public. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and concluded the public hearing with vote of thanks.

List of public attended the public hearing along with recorded video (CD) of the entire proceedings are enclosed herewith.

6.8.2021

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Virudhunagar.

District Revenue Officer/
Additional District Magistrate,
Virudhunagar.

திரு.ஜெ. வினோத்ஜெனி ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி, சர்வே எண்.216, சின்னகாமன்பட்டி கிராமம், சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் தொடங்கவுள்ள சுரங்கத்திட்டம் தொடர்பாக 06.08.2021 முற்பகல் 11.00 மணியளவில் திரு. எஸ்.எம்.திருமண மண்டபம், எண். 4/214B, மதுரை பைபாஸ் ரோடு, சிவகாசி பிரிவு, சாத்தூர்தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.

பங்கேற்றோர்:

திருவாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | இரா.மங்களராமசுப்ரமணியன் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/<br>கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்<br>விருதுநகர். |
| 2 | கு.இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | ஆர்.புஷ்பா | : | வருவாய் வட்டாட்சியர்,<br>சாத்தூர் |
| 4 | வி.வெங்கடேஷ் | : | வட்டாட்சியர், சாத்தூர் |
| 5 | கே.பெருமாள்சாமி | : | சிறப்பு காவல் சார்பு ஆய்வாளர்,<br>வச்சகாரப்பட்டி காவல் நிலையம் |
| 6 | க.கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 7 | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | : | 51 எண்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். ஜெ.வினோத்ஜெனி ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், விருதுநகர், ஏனைய அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் விபரம் ஏற்கனவே "தினமணி" மற்றும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 30.06.2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், இப்பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலமும் மற்றும் தண்டோரா மூலமும் விரிவாக அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் தாக்க மதிப்பீடு பிரிவால் 09.06.2021 அன்று வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகள் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்கள் மற்றும் அது தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகளின் பதில் ஆகியன வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் உடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

பின்பு, மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், இத்திட்டத்தினுடைய பிரதிநிதிகளை திட்டம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறி, இத்திட்டம்

தொடர்பான சந்தேகங்களையும், விளக்கங்களையும் கேட்குமாறு பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்.

பின்பு தி/ள்.ஜெ.வினோத்ஜெனி ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரியின் சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

அதன் பின்பு, இக்கூட்டத்தில் பொதுமக்களின் ஆலோசனைகள், கருத்துக்கள், சந்தேகங்கள் மற்றும் அது தொடர்பாக இத்திட்டத்தின் பிரதிநிதி அளித்த விபரங்கள் பின்வருமாறு.

திரு. பாண்டியராஜன், கீழஒட்டம்பட்டி

இத்திட்டத்தினால் எங்களுக்கு வேலை கிடைக்கும்; மற்றும் எங்களுடைய வாழ்வாதாரம் மேம்படும்.

திரு. அய்யனார், சிவகாசி

ஆரம்பிக்கப்படவுள்ள இந்த குவாரி மெயின்ரோட்டில் இருந்து தூரத்தில் உள்ளது. இந்த குவாரியிலிருந்து மண் மற்றும் ஜல்லி கற்கள் கிடைக்கும். இது கட்டுமானத்திற்கு உதவியாக இருக்கும்.

திருமதி.சத்யா, பஞ்சாயத்து தலைவர், சின்னகாமன்பட்டி

பள்ளி மற்றும் விடுதிக்கு தண்ணீர் வசதி செய்து தரும்படி கேட்டுக்கொண்டார். மேலும், சாலை வசதி செய்திடவும், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும் கேட்டுக்கொண்டார். அவர் இத்திட்டத்தினை வரவேற்றார்.

திரு.முனியப்பன், நாம்தமிழர் கட்சி, சாத்தூர்

உள்ளூர் மக்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சியை அணுகி இத்திட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற தீர்மானித்துள்ளனர். இது குறித்து அப்பகுதியில் உள்ள உள்ளூர் மக்களிடம் விசாரிக்கவேண்டும்.

திரு.முருகானந்தம், சிப்பிப்பாறை

பஞ்சாயத்து தலைவர் உள்ளிட்ட இதற்கு முன்பு பேசியவர்களின் கருத்துக்களை பரிசீலினை செய்து இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கவேண்டும்.

திரு.சேகர், சிவகாசி

இத்திட்டத்தினால் டீசல் செலவு குறையும். உள்ளூர் மக்களுக்கு சலுகைகள் கிடைக்கும். மக்களின் வருமானம் உயரும். இத்திட்டத்தினால் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும். இத்திட்டத்தினை பரிந்துரை செய்ய வேண்டினார்.

திரு.முனியப்பன், நாம்தமிழர் கட்சி, சாத்தூர்

இத்திட்டத்தினால் கட்டிடங்களுக்கு ஏதேனும் பாதிப்பு வருமா என்று வினா எழுப்பினார். இப்பகுதியில் விவசாயம் செய்ய இயலாது என்ற நம்பிக்கையில் கல்குவாரிகள் இங்கு வருகிறது. இது உண்மையல்ல. கிணற்று நீர் மற்றும் வைப்பாறு நீரைக்கொண்டு விவசாயம் செய்யலாம். உள்ளூர் மக்களின் கருத்தினை அறியவேண்டும்.

திரு. தங்கராஜ், திட்டஉரிமையாளரின் சுற்றுச்சூழல் ஆலோசகர்:-

இத்திட்டம் பல்வேறு அரசு துறைகளின் ஒப்புதல் பெற்று இயங்க இருக்கிறது. 300 மீட்டர் சுற்றளவில் எந்த ஒரு கட்டிடமும் இல்லை. திட்டத்தினால் கட்டிடங்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. 33 சதவீத இடம் தரிசு நிலமாகவே இருக்கிறது. அதில் கருவேலமரங்கள் வளர்ந்துள்ளது. இப்பகுதி கடுமையான பாறைகளால் நிறைந்ததாகும். மழைக்காலத்தில் மட்டுமே தண்ணீர் கிடைக்கும். தற்சமயம் நவீன முறையை பயன்படுத்தியே கல் உடைப்பு

நடைபெறுவதால் கல் பறக்கவோ, அருகில் உள்ள கட்டிடங்களுக்கு சேதமோ ஏற்படாது. நிறைய மரங்களை வளர்க்க திட்டமிட்டுள்ளோம்.

திரு.எம். பால்பாண்டி, துணைத்தலைவர்

இந்த குவாரி தொடங்குவதனால் எந்த ஒரு பாதிப்பும் இல்லை. மேலும், குவாரி திட்டத்திற்கு ஆட்சேபனை இல்லை. உள்ளூர் மக்களுக்கு வேலை கிடைக்கும்.

திரு. வினோத்ஜெனி

இந்த திட்டத்தினால் எந்த பாதிப்பும் ஏற்படாது. மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பான கருத்துக்கூற யாரும் முன்வராததால், மேலும் கருத்துக்களை தெரிவிக்க மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், அவர்கள் கேட்டுக்கொண்டார். இதன் பின்பும் யாரும் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. இறுதியில், கூட்டத்தில் இதுவரை நடந்த நடவடிக்கைகளை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் தொகுத்துக் கூறி, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

6.8.2021

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

மாவட்ட வருவாய் அலுவலர்/,
கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்
விருதுநகர்.